

# தமிழ்த் திரை உலகம் ஒரு பார்வை

By Sundari Balasubramaniam, Reference Librarian, Lee Kong Chian Reference Library

இயல், இசை, நாடகம் என்ற முப்பரிமாணக் கலையின் வடிவம்தான் சினிமா என்பது. இலக்கியம், ஓவியம், சிற்பம், இசை, நடனம் போல சினிமாக் கலைக்கும் தனி இடமுண்டு. பார்க்கும் எவரையும் ஒரு மாய உலகத்திற்கு அழைத்துச்செல்லும் ஒரு சிறந்த கட்புல கலையாகும். இன்று இதன்பால் மயங்காதவர் வெகு சிலரே. உணர்வுபூர்வமாக நம்மை ஒரு தனி உலகத்திற்கு அழைத்துச் செல்லும் சினிமாக் கலை என்பது ஒரு குறுகிய எல்லைக்குள் கட்டுப்பட்டதல்ல. அதன் உருவாக்கத்திற்குப் பல துறையைச் சேர்ந்தவர் காரணமாக உள்ளனர். உலக நாடுகள் தமது நாட்டின் கலை அடையாளங்களில் ஒன்றாகச் சினிமாவையும் கருதுவதால் இன்று கலைப் பொக்கிஷங்களாக சினிமாவும் நாடுகளுக்குப் பெருமை சேர்க்கிறது. சிங்கப்பூரும் மற்ற நாடுகளுக்கு தான் சளைத்தல்ல என பாராட்டும் வகையில் பல சிறந்த படைப்புகளை வழங்கியுள்ளது. வசந்தம் சென்ட்ரலில் தமிழில் ஒளியேரும் குறும்படங்கள், நாடகங்களின் தரம் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இவற்றைக் கருத்தில் கொண்டு லீ கொங் சியன் நூலகத்தில் தரம் வாய்ந்த நூல்கள், சினிமா, நாடகம், இசை ஆகிய துறைகளில் சேகரிக்கப்பட்டுள்ளன.

## சினிமாவின் தோற்றம், வளர்ச்சி

இருபதாம் நூற்றாண்டு துவங்கும் முன்பே திரைப்படம் தமிழ்நாட்டில் தோன்றி விட்டது. **1895**இல் லூமியே சகோதரர்களால் கண்டுபிடிக்கப்பட்ட சலனப்படம், இரண்டே ஆண்டுகளில் சென்னைக்கு வந்துவிட்டது. **1897** ம் ஆண்டு எட்வர்டு என்ற ஆங்கிலேயர் சென்னையில் முதல் சலனப்படக் காட்சியை திரையிட்டுக் காட்டினார். இதைத்

தொடர்ந்து பல சலனப்படக் காட்சிகள் சென்னை நகரின் பல்வேறு இடங்களில் திரையிடப்பட்டன. இக்காட்சிகளுக்கு நாளடைவில் தரவு கூடியது. இதைத் தொடர்ந்து 1900இல் தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு, அன்றைய மௌன்ட் ரோடில் வார்விக் மேஜர் என்னும் ஆங்கிலேயரால் கட்டப்பட்டது. இதன் பெயர் எலக்ட்ரிக் தியேட்டர் என்பதாகும். மின் விளக்கு மூலம் ஒளியெறியப்படும் வசதியுடன் இருந்ததால் இந்த அரங்கிற்கு அந்தப் பெயர் வந்தது.

1931 ம் வருடம் முதல் தமிழ் பேசும் படம் திரையிடப்பட்டதுடன் ஒரு புதிய சகாப்தம் துவங்கியது. உலகத் திரைப்படக் கலை வரலாற்றில் தமிழ்த் திரைப்படக் கலைக்குச் சிறப்பான இடமுண்டு. அது அந்தந்த அரசியல் சூழலுக்கேற்பவும், பண்பாட்டிற்கேற்பவும் மாறுபட்டு இருந்தது. தமிழ் ஊமைத் திரைப்படக் கலையும் பேசும்படக் கலையும் பிறந்த போது இந்திய தேசிய விடுதலைப் போராட்ட அரசியல் இயக்கப் போக்கு நிரம்பியிருந்தது. பேசும் படங்கள் காலத்தில் பாடல்கள் மிகுதியாகவும் வசனங்கள் குறைவாகவும் இருந்தது. இக்காலகட்டத்தில் எம். கே தியாகராஜ பாகவதர், பி. யூ சின்னப்பா, எஸ். ஜி. கிட்டப்பா போன்றவர்கள் புகழ் பெற்ற நடிகர்களாக விளங்கினர்.

கலைஞர் மு. கருணாநிதியின் 'பராசக்தி'' ஏற்படுத்திய திருப்புமுனையும் தாக்கமும் திரைப்பட வரலாற்றில் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்தது. பாடல்கள் குறைக்கப்பட்டு வசனங்கள் அதிகப்படுத்தப்பட்டன. 'பராசக்தி', 'மனோகரா', 'திரும்பிப்பார்' போன்ற படங்கள் வசனங்களாலேயே பெரும் வெற்றிபெற்றன.

சிவாஜி கணேசன், பத்மினி, கண்ணாம்பாள், எஸ். எஸ். ராஜேந்திரன் போன்றவர்கள் சிறப்பாக வசனம் பேசி நடித்தனர். பின்னர் வரலாற்றுக் கதையம்சம் கொண்ட ராஜா ராணிப் படங்களின் மூலம் எம்.ஜி.ர். புகழ் பெற்றார். இவர் காலத்தில் சண்டைக் காட்சிகள் பிரபலமடைந்தன. வடமொழி கலந்து பேசப்பட்ட வசனங்கள் அண்ணா, கலைஞர், கண்ணதாசன் போன்றவர்களின் கைவண்ணத்தில் தூய தமிழில் மணம் பரப்பின. எளிமையான வார்த்தைகளில் பாமரனும் புரிந்துகொள்ளும் வகையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன் ஆகியோரால் எழுதப்பட்ட பாடல்கள் அனைவரையும் மிகவும் ஈர்த்தன.

குடும்பக்கதைகளே அதிகம் எடுக்கப்பட்ட காலத்தில் ஸ்ரீதர், பாலச்சந்தர் போன்றோர் நவரசங்கள் கொண்ட படங்களை எடுத்து மற்றொரு திருப்புமுனை ஏற்படுத்தினர். படப்பிடிப்பு அரங்குகளிலேயே எடுக்கப்பட்டு வந்த படங்கள், பாரதிராஜாவின் வருகையால் வெளிப்புறங்களில் எடுக்க ஆரம்பித்தனர். திரையிசையிலும் திருப்புமுனையாக இளையராஜா வருகையினால் பல மாற்றங்கள் வந்தன. இன்று இந்தியாவில் இந்திப் படங்களுக்கு அடுத்த படியாக வர்த்தக ரீதியிலும் படங்கள் எண்ணிக்கையிலும் அதிகப் படங்கள் எடுப்பது தமிழ்த் திரையுலகம் தான்.

திரை உலகம் பற்றி அறிந்துகொள்ள லீ கொங் சியன் மேற்கோள் நூலகத்தில் பல புத்தகங்கள் உள்ளன. திரைப்பட வரலாறு, தயாரிப்பாளர்களின் அனுபவங்கள், திரை படப்பாடல்கள், திரைக் கலைஞர்கள் வாழ்க்கை வரலாறு என பரந்த அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டத் தலைப்புகள் நூலகத்தின் தமிழ்த் தொகுப்பில் வைக்கப்பட்டுள்ளன. ஆர்வலர்கள் வந்து இப்புத்தகங்களைப் படித்துப் பயனடையலாம்.

## திரைக் கலையின் வரலாறு மற்றும் வளர்ச்சி:

ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை திரைப்படக் கலையின் வளர்ச்சியைப் பற்றி பல புத்தகங்கள் உள்ளன. திருநாவுக்கரசு எழுதிய சொல்லப்படாத சினிமா (2004), தமிழ் குறும் படம் மற்றும் வணப்படம் வரலாற்றினைக் கூறும் நூல். அதோடு, உலகக்குறும்படங்களைப் பற்றியும் இந்தியக் குறும்படங்களைப் பற்றியும் ஒரு அறிமுக வரலாறும் தரப்பட்டுள்ளது.


இந்நூலும்

அடூர் கோபாலகிருஷ்ணனின் சினிமாவின் உலகம் (2004), சினிமாவின் ஆரம்பவளர்ச்சியில் இருந்து படிப்படியாக இக்கலையின் பல பரிணாமங்களைப் பற்றி நமக்கு அறிமுகப்படுத்துகின்றது. கலைச்செல்வன் எழுதிய சினிமா: வரலாறும் இயக்கமும் (2002), சினிமாவைப் பற்றி பொதுவாகத் தெரிந்துகொள்ள விரும்பும் பிரிவினரும், சினிமாவின் கலை நுணுக்கங்களை ஆழ்ந்து ரசிக்கும் ரசிகர்களுக்கும் சினிமாத் துறையில் ஈடுபட விரும்பும் மாணவர்களுக்கும் மிகவும் பயனளிக்கும். இதேபோல் மற்றுமொரு நூல் ராஜ்கதிர் எழுதிய திரைக்கலை ஒரு பார்வை (2003). இந்நூலும் வாசகர்களுக்குத் திரைக்கலையின் வரலாற்றினை எளிமையாக விளக்குகின்றது.

## திரைக்குப் பின்னால்

திரைக்குப் பின்னால் சினிமாவின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றும் இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள், இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், பாடகர்கள் என பலரின் வாழ்க்கைக் குறிப்புகள், அவர்களின் சாதனைகள் என பல தகவல்கள் கொண்ட புத்தகங்கள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. ராணிமைந்தன் எழுதிய ஏ.வி.எம். எங்கள் பார்வையில் (2002) தயாரிப்புத் துறையில் வெற்றிநடை போட்ட திரு ஏ.வி.எம். எனும் மாமேதையைப் பற்றிய நூலாகும். தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்களைப் பற்றி நம்மில் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை ஏனென்றால் நடிகர்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் அவர்களுக்குக் கொடுப்பதில்லை. ஆனால் தமிழ்த் திரையுலகம் இந்த அளவு வளர்வதற்கு அவர்களும் ஒரு முக்கிய காரணம். 1913இல் இருந்து இன்று வரை திரை உலகத்திற்குப் பாடுபட்ட பல தயாரிப்பாளர்களின் வாழ்க்கை வரலாற்றை, முக்தா சீனிவாசன் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் வரலாறு (1993) என்ற தலைப்பில் 2 பாகமாகத் தொகுத்தளித்துள்ளார்.



இதேபோல் ராமச்சந்திரனின் தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள் (2003), திரை உலகின் 70 ஆண்டுகால வரலாற்றில் சிறந்த படங்களை இயக்கிய இயக்குநர்களின் வரலாற்றை விளக்குகிறது. திரைஞானியின் அவரவர் வாழ்வில் ஆயிரம் அர்த்தங்கள் (2001), நடிக நடிகையரின் பேட்டிகளை சுவாரஸ்யமாக அவர்களே எழுதுவது போன்று சிறு கட்டுரைகளாகத் தொகுத்து வழங்குகிறது. சின்னராசுவின் தமிழ்த் திரை உலகைத் தலை நிமிர வைத்தவர்கள் (2000) புத்தகத்தில் உள்ள கட்டுரைகள் அன்றைய கலைஞர்களின் வாழ்க்கையில் நடந்த நாம் அறிந்திராத பல சம்பவங்கள், திரை உலகிற்கு அவர்களின் பங்களிப்புகள் போன்ற அரிய தகவல்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

## திரைப்படங்கள் பற்றிய தகவல்கள்

தமிழ்த் திரையுலக பொக்கிஷங்களை முறைப்படி சேகரிக்கும் பணியில் கடந்த 52 வருடங்களாக தனி மனிதனாக இருந்து செயல்புரிந்து வரும் பிலிம்நியூஸ் ஆனந்தன் தான் சேகரித்த தகவல்களை சாதனைகள் படைத்த தமிழ்த்திரைப்பட வரலாறு (2004) எனும் தலைப்பில் வெளியிட்டுள்ளார். இந்நூலில் பல அரிய புகைப்படங்கள், 1931 ம் ஆண்டு முதல் வெளியான தமிழ்ப் படங்கள், தேசிய விருது பெற்ற படங்கள்,




தமிழ்நாட்டு அரசின் விருது பெற்ற படங்கள் என பல அரிய தகவல்களை எளிமையாக அனைவரும் அறியும் வகையில் தொகுக்கப்பட்டுள்ளன. இதன் சிறப்பம்சம் படப்பெயர்கள் மட்டுமல்லாமல், அதில் நடித்தவர்கள், தயாரிப்பாளர்கள், கதையாசிரியர், இசையமைப்பாளர், பாடலாசிரியர், ஒலியமைப்பாளர், என்று பல விவரங்கள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. ஆய்வாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் இது ஒரு கலைப்பொக்கிஷமாகும்.

## இசை


திரைப்படப் பாடல்களுக்கு என்றைக்குமே மக்களிடையே பெரும் வரவேற்பு உள்ளது. விதம்விதமான இசையில் இப்பாடல்கள் கேட்பவரின் மனதில் ஆழப் பதிந்துவிடுகின்றன. இவற்றைப் படித்துப் பார்க்க விரும்பும் ரசிகர்களுக்கு நூலகத்தில் பல புத்தகங்கள் உள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இருபெரும் கவிஞர்களான பாரதி, பாரதிதாசன் பாடல்கள் திரைப்படங்களில் பொருத்தமான இடங்களில் தயாரிபாளர்கள், இயக்குநர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. வாமனன் தொகுத்த பாரதிதாசன் திரைப்பாடல்கள் (2000) நூலில் 1930 ம் ஆண்டு தொடங்கி ஆதியோடு அந்தமாய் அவரின் திரை இசைச் சாதனைகளை பாடல் இடம்பெற்ற திரைப்படங்களோடு வகைப்படுத்தி தொகுக்கப்பட்டுள்ளன. கவிஞர் கண்ணதாசனின் திரைப் பாடல்கள் நாம் நன்கு அறிவோம். வி.சுந்தரம் எழுதிய வெள்ளித் திரையில் கவிஞர் கண்ணதாசனின் தங்க இலக்கியங்கள் (2002), நமக்கு அவரின் கவிதைகளை இலக்கிய நயத்தோடு அறிமுகப்படுத்துகிறது.

வாமனன் எழுதிய திரை இசை அலைகள் (2004), 70 ஆண்டு தமிழ்த் திரை உலக வரலாற்றில் திரை இசையின் தன்மை, இசையால் வெற்றியடைந்த படங்கள், பின்னணி பாடியோர், இசையமைப்பாளர், அவர்களின் வாழ்க்கை வரலாறு என திரை இசை உலகம் பற்றிய பெருநூலாக விளங்குகிறது. நாம் அறிந்திராத பல அரிய கலைஞர்களை






நம் கண் முன்னே கொண்டுவந்து நிறுத்தியுள்ளார். நான்கு பாகங்களாக வெளிவந்துள்ள இந்நூல் திரை இசை ஆய்வாளர்களுக்கும், தமிழ் இசை ஆய்வாளர்களுக்கும் மூல நூலக விளங்கும்.

சிலோன் விஜயேந்திரனின் கம்பதாசனின் திரைப் பாடல்கள் (2002), நமக்கு அதிகம் பரிச்சயமில்லாத ஒரு மாமேதையை அறிமுகப்படுத்துகின்றது. இவரின் பாடல்கள் அக்காலத் திரைப்படங்களில் இடம்பெற்றுள்ளன. கண்ணதாசனுக்கு முன்னோடி கம்பதாசன் என்று கூறலாம். தத்துவக் கருத்துகளை, உலகியல் கருத்துகளை, அறநெறிகளை அழகிய தமிழில் சுவைபட இயற்றியுள்ளார். கவிஞர் வாலியின் திரை இசைப் பாடல்கள் (2005), கே. ஜீவபாரதியின் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையார் பாடல்கள் (2003), முத்தையனின் திரைக்கவித் திலகம் மருதகாசியின் திரையுலகச் சாதனைகள் (2003), வாமனன் தொகுத்த பாபநாசம் சிவன் திரைப்படப்பாடல்கள் (2000), போன்ற நூல்கள் மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த அருமையான பாடல்களின் தொகுப்பாகும்.

## சுயசரிதை

திரைக் கலைஞர்களின் சுயசரிதை தொகுப்பில் உள்ள திரையின் மூத்த கலைஞர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய புத்தகங்கள் வாசகர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக விளங்கும். அந்த வகையில் சிவாஜிகணேசனின் எனது சுயசரிதை (2002) ஒரு சிறந்த கலைஞனின் சரித்திரமாக அமைந்துள்ளது. வாழ்க்கையில் தாம் சந்தித்த போராட்டங்கள், வெற்றி தோல்விகள், இல்லறம், நண்பர்கள் இன்னும் பல தகவல்கள் படிப்பவர்களுக்கு அறிவுக்களஞ்சியமாக விளங்கும். இப்புத்தகத்தில் பல அரிய புகைப்படங்களும் நிறைந்து காணப்படுகிறது. இவ்வரிசையில் ஜெயஸ்ரீ விஸ்வநாத் எழுதிய வாழ்க்கைப் படகு: ஜெமினி கணேசனின் வாழ்க்கை வரலாறு (2001), கலைமாமணி வி.கே.ராமசாமியின் எனது கலைப்பயணம், பாஸ்கரதாசன் எழுதிய இசைஞானப் பேரொளி பத்மஸ்ரீ கே.பி. சுந்தராம்பாள் (2002), சிவகுமாரின் இது ராஜபாட்டை அல்ல (2004) மற்றும் கமல்ஹாசன், ரஜினிகாந்த் போன்றோரின் சினிமா வரலாறும் நூலகத்தில் உள்ளன.



கிருஷ்ண லீலா நாடகத்தில் பெண் வேடத்தில் சிவாஜிகணேசன்

லீ கொங் சியன் நூலகத்தின் தமிழ்த் தொகுப்பில் பரந்த அளவில் புத்தகங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழ் திரைக்கலையைப் பற்றியுள்ள புத்தகங்கள் இத்துறையில் ஆர்வமுள்ளோர், கலைஞர்கள், மாணவர்கள் என பலரும் படித்துப் பயனடையச் செய்யும் ஒரு சிறந்த தொகுப்பாகும்.